# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.

## STC.No. 54/2025

## வழக்கு சாட்சி DW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **கிருஷ்ணமூர்த்தி** | தொழில் | : தோட்ட வேலை |
| தகப்பனார் பெயர் | : ராமசாமி | கணவர் பெயர் | : ––––– |
| கிராமம் | : போடிநாயக்கனூர் | இனம் | : ஆண் |
| தாலுகா | : போடிநாயக்கனூர் | வயது | : 38/2026 |
| மாவட்டம் | : தேனி | நாள் | : 10.08.2026 |

**<u>புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

அடுக்கம் கிராமம் பாலமலை மற்றும் , கேரளாவில் உள்ள சாந்தான் பாறை கிராமம் , இடுக்கியில் உள்ள தோட்டத்தில் தோட்டத்து வேலை செய்து வருகிறேன் . என் மீது வழக்கு தொடுத்துள்ள அங்காள ஈஸ்வரி எனது சமூகத்தை சேர்ந்தவர் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த Ex.D1 ஆவணத்தில் எந்த தேதியில் பணம் அனுப்பப்பட்டது என்ற தேதி விபரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . அழகர்சாமியின் வங்கி கணக்கிற்கு தான் பணம் அனுப்பபட்டது என்ற காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை , ஆனால் வங்கி பரிவர்த்தனை விபரத்தை தாக்கல் செய்ய தயாராகவுள்ளேன். Ex.D1 ஆவணத்தில் Remarks என்ற காலத்தில் நான் குறிப்பிடும் விபரம் தான் தெரியும் என்றால் சரிதான் . Ex.D2 ஆவணமானது மகேஸ்வரிக்கு நான் அனுப்பிய மொத்த பணப்பரிவர்த்தனை விபரம் என்றால் சரியல்ல, நேரிலும் அவரிடம் நான் பணம் கொடுத்துள்ளேன் . மகேஸ்வரியிடம் நான் சீட்டுத்தொகைக்காக பணம் கொடுத்தேன் என்றால் சரிதான்.

Ex.D3 ஆவணம் சீட்டுத்தொகை செலுத்தப்பட்டதற்கான வரவு குறிப்பு ஆவணமாகும். Ex.D3 ஆவணத்தில் எந்தவொரு பெயர் விபரமோ, விலாசம் விபரமோ இல்லை என்றால் சரிதான் . என் பெயரில் சீட்டுத்தொகை கட்டப்பட்டுள்ளது என்ற குறிப்பு Ex.D3 ஆவணத்தில் குறிப்பு எங்கும் இல்லை என்றால் சரிதான் . Ex.D3 போன்ற ஆவணம் யார் வேண்டுமானாலும் எழுதி தாக்கல் செய்ய இயலும் என்றால் இயலும் . மகேஸ்வரியும், அங்காள ஈஸ்வரியும் அக்கா, தங்கை என்று விசாரித்து தெரிந்து கொண்டதாக சொல்லியுள்ள நிலையில் யாரிடம் அந்த விபரத்தை விசாரித்து தெரிந்து கொண்டேன் என்ற விபரத்தை இந்த வழக்கில் நான் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு நான் விசாரித்து தெரிந்துகொண்டிருந்தால் அவரையும் இந்த வழக்கில் நான் சாட்சியாக முன்னிலைப்படுத்தியிருப்பேன் என்றாலும், அவ்வாறு நான் யாரையும் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

கோகுலம் சிட் பண்ட் நிறுவனம் போடி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் STC 14/2021 என்ற காசோலை வழக்கு ஒன்று என் மீது தொடுத்தார்கள் என்றால் சரிதான் , ஆனால் அந்த காசோலை தொகையை கட்டி அந்த வழக்கை முடித்துவிட்டேன். நான் தாக்கல் செய்த Ex.D1 முதல் Ex.D3 வரையிலான ஆவணங்களில் எந்த விதமான அதிகாரபூர்வ முத்திரையோ , கையொப்பமோ அதில் இல்லை என்றால் சரிதான் . Ex.D1 முதல் Ex.D3 வரையிலான ஆவணங்களை இந்த வழக்கிற்காக நான் பின்னிட்டு உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல . Ex.D2 ஆவணம் எனது கைப்பேசியில் இருந்து Scree Shot எடுத்து தாக்கல் செய்யப்பட்ட ஆவணமாகும் . Ex.D2 ஆவணத்துடன் சாட்சியச் சட்டத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்படவேண்டிய சான்று எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . சீட்டு பணத்தை கட்டி முடித்த பிறகு மகேஸ்வரியிடம் கொடுத்து வைத்திருந்ததாக சொல்லப்படும் காசோலையை திரும்ப பெறுவதற்கு சட்டப்படி நடவடிக்கை

எதுவும் எடுத்துள்ளேனா என்றால் போடி , நகர் காவல் நிலையத்தில் அந்த காசோலை தொடர்பாக நான் புகார் கொடுத்துள்ளேன். போடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகச் சொல்லப்படும் புகாரின் நகல் , மனு ஏற்பு இரசீது ஏதேனும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான், மகேஸ்வரியிடம் எந்தவொரு காசோலையும் கொடுக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் போடி நகர் காவல்நிலையத்தில் எந்தவொரு புகாரும் கொடுக்கவில்லை என்றாலும், அவ்வாறு புகார் கொடுத்திருப்பின் அது தொடர்புடைய புகார் ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அனுப்பிய சட்ட அறிவிப்பான Ex.P4 வழக்கறிஞர் அறிவிப்பில் மகேஸ்வரிக்கு ரூ .50 மதிப்புடைய பத்திரமும், 3 IDBI வங்கி காசோலைகள் கையொப்பம் மட்டும் செய்து விபரங்களை பூர்த்தி செய்யாமல் , புரோ நோட், குத்தகை பத்திரம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சட்ட அறிவிப்பில் காசோலை எண் விபரங்கள் எதுவும் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

எனது முதல் விசாரணையில் மகேஸ்வரி மற்றும் அழகர்சாமியிடம் IDBI மற்றும் City Union Bank காசோலை கொடுத்ததாகச் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . எனது முதல் விசாரணையில் மகேஸ்வரியிடம் தான் IDBI மற்றும் City Union Bank நிரப்பப்படாத, கையொப்பமிடாத காசோலைகள் இரண்டு கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது சட்ட அறிவிப்பில் கையெழுத்திட்ட, நிரப்பப்படாத 3 காசோலை கொடுத்ததாகச் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . மகேஸ்வரியிடம் நான் எந்தவொரு சீட்டு பரிவர்த்தனை மேற்கொள்ளவில்லை என்றாலும், காசோலை கொடுக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக வேண்டி அவர் குறித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . நான் சொன்னதுபோன்று சீட்டுப்பணம் பரிவர்த்தனை செய்திருந்தால்

அதுதொடர்புடைய அசல் ஆவணத்தை முறையாக தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், வழக்கிற்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . இந்த வழக்கிற்கும், நான் தாக்கல் செய்துள்ள 3 ஆவணங்களுக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல . நானும், புகார்தாரர் அங்காள ஈஸ்வரியும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றாலும் , வழக்கிற்காக வேண்டி அவரை தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . நான் சட்ட அறிவிப்பில் கையெழுத்திட்டு காசோலை கொடுத்ததாகச் சொல்லிவிட்டு , முதல் விசாரணையில் கையெழுத்திடாமல் காசோலை கொடுத்ததாக முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அங்காள ஈஸ்வரியிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு அதற்காக காசோலையை கொடுத்தேன் என்றால் சரியல்ல. Ex.D3 ல் உள்ள கையெழுத்து மகேஸ்வரியின் கையெழுத்து என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

**<u>எதிரி தரப்பில் மறுவிசாரணை :</u>**

Ex.D3 ல் உள்ள வரவு வைக்கும் பகுதியில் உள்ள கையொப்பம் மகேஸ்வரியின் கையெழுத்தாகும். Ex.D1 ல் உள்ள IMPS ஆவணத்தில் தேதி குறிப்பிடப்படுமா என்றால் குறிப்பிடப்படாது.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.08.10 16:25:14 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.